மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகளிலே, பள்ளிகளிலே படித்து வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் எந்த அரசும் எந்த நாட்டிலும் அப்படிச் செய்ய இயலாது ; இங்கும் செய்ய இயலாது. எதிர்காலத்தில் அவர்கள் வேலையைத் தேடிக்கொள்ள, அல்லது வேலையை உருவாக்கிக் கொள்ளப் பயன்படுகின்ற அறிவு ஆற்றலைத் தரத்தான் பள்ளிச்சாலைகள் பயன்படும். பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகளில் படித்து வருகின்றவர்களுக்கு இப்பொழுது வேலைவாய்ப்பில்லை என்கிற நிலை ஏற்படவில்லை.

பெரியகுளம் கண்மாய் கரைச்சாலை.

*481 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா ?

பழனி வட்டம், ஆயக்குடிப் பகுதியில் உள்ள பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலையைச் சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத்திட்டத்திற்கான முன்னிலை தீர்வான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

புலவர் சி. பழனிச்சாமி : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார். இந்தக் கேள்வியினுடைய எண் 7517. என்னுடைய பெயரில் வந்துள்ள இந்தக் கேள்வி, இன்றைக்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஏதாவது இருந்தால் அறையிலே வந்து கேளுங்கள். இதிலே துணைக் கேள்வி கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : செயலாளர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்..

புலவர் சி. பழனிச்சாமி : இந்தக் கேள்விக்கு செயலாளர் அனுப்பிய பதிலில் மாறுபாடு இருக்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இங்கு சொல்வது சரியல்ல, அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : நான் கேட்ட மூலக்கேள்வி வேறு.

1975 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, இந்த வரதாப் பட்டணம் சாலை, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலை, இரண்டு சாலைகளும் அந்தப் பகுதியிலே இருக்கிற உழவர் பெருமக்களுக்கு மிகவும் அவசியமான திட்டங்கள். உழவர் பெருமக்கள் தங்கள் விளைபொருள்களை அந்தச்சாலைகளின் வழியாகத்தான் வண்டியிலே ஏற்றிவரவேண்டும். அப்படி இருக்கும்போது, அந்தச்சாலைகள் மிகவும் பழுதுண்ட நிலையிலே இருக்கின்றன. ஆகவே, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற வறட்சி நிவாரணப் பணியிலே இவற்றையும் சேர்த்து, இப்பொழுதே இரண்டு சாலைகளையும் சீர் திருத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வறட்சி நிவாரண வேலைகளிலே இந்தப் பாதைகளில் ஜல்லி போடக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. ஆகவேதான் வறட்சிப் பணிகளில் ஜெல்லி போடுகின்ற வேலையையும் தார் போடுகின்ற வேலையையும் செய்ய முடியாது. மணல் வேலை மட்டுதான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இருந்தாலும் தலப் பொறியாளர்கள் இது பற்றிப் பரிசீலனத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புலவர் பழனிச்சாமி அவர்கள் பழய வட்டம் ஆயக்குடிப் பகுதியில் உள்ள வரதாப்பட்டணம் சாலை, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலை ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைப்பது பற்றி இரண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதில் வரதாப் பட்டணம் சாலை, ஆர்.டி.எல்.ஏ. சாலையிலே வருகிறது. அதனாலே அது அந்தத் துறைக்குப் போயிருக்கிறது, இது பொதுப் பணித் துறையைச் சேர்ந்ததால், இந்த இலாகாவில் வந்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

ஆரணி ஆற்றின் கரைகள்.

*482 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளைப் பலப்படுத்த Revetment கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத்திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, ஆரணி ஆற்றின் கரையில் ரிவெட்மென்ட் அமைக்கிற இந்தத் திட்டத்தை இந்த ஆண்டா